உடற்பயிற்சி ஆசிரியர்கள்

திரு. என். சுந்தரேச தேவர்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உடற்பயிற்சி ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற நூற்றுக் கணக்கானவர்கள் வேலை வாய்ப்பின்றி இருப்பது அரசுக்கு தெரியுமா?

(இ) ஆம் எனில், இவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: (அ) இது குறித்து அரசாங்கத்திடம் தகவல் எதுவுமில்லை.

(இ) முடிவு செய்துள்ள அளவுப்படி உடற்பயிற்சி ஆசிரியர்கள் வேலையில் அமர்த்தப்பட வேண்டுமென்று பள்ளிக் கல்வி இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார். உடற்பயிற்சி ஆசிரியர்களிடையே வேலைவாய்ப்பற்ற நிலைகள் ஏதேனும் நிலவுவதாக இருப்பின், அந்நிலையை இது சீர் செய்யுமென நம்பப்படுகிறது.

THIRU G. KRISHNAMOORTHY: Is there any scheme just to employ Physical Training Instructors in High Schools and Elementary Schools, Sir?

THE HON. THIRU S. MADHAVAN: I have no information, Sir.

திரு. எம். எத்திராஜுலு: உடற்பயிற்சி நிறுவனம் ஒய்.எம்.சி.ஏ.-யில் நடைபெறுகிறது. தமிழகச் சர்க்காரால் நடத்தப்படும் உடற்பயிற்சி நிலையம் இருக்கின்றதா?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன்: புள்ளிவிவரம் இல்லை. ஒய்.எம்.சி.ஏ. இங்கே நடத்துகிறது. காரைக்குடியில்கூட ஒன்று இருக்கிறது.

Salem Steel Plant.

* 193 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Eduacation and Industries be pleased to state—

(*a*) whether the Chief Minister who visited Japan during 1968 had talks with Japanese Industrial experts regarding the Salem Steel Plant; and

(*b*) if so, the details thereof?

சேலம் இரும்பு தொழிற்சாலை

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மையில் ஜப்பானுக்குச் சென்ற தமிழக முதலமைச்சர் சேலம் இரும்பு தொழிற்சாலை பற்றி ஜப்பானிய தொழில் நிபுணர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினரா?

[11th March 1969

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) ஜப்பானுக்கு முன்னுள் முதல் அமைச்சர் அவர்கள் சென்றிருந்த போது திருவாளர் மாருபேனி இடா நிறுவனத்தினர் கஞ்சமலை இரும்புக் கனிப் படிவங்களைச் செறிவு படுத்துவதற்கு, கஞ்சமலை இரும்புக் கனி வளர்ச்சியில் அக்கறை காட்டினர். சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை நிறுவும் செயற்குறிப்புகளிலும் அவர்கள் அக்கறை காட்டினர்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இரும்பு தயாரிப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்களான இரும்புக் கனிகளை இங்கிருந்து கப்பல்களில் ஏற்றி அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்து அந்தப் பணத்தை வைத்து இங்கே இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்துவது என்று முன்னுள் முதலமைச்சர் பேசியதாக எனக்கு ஞாபகம். அந்த யோசனை இப்போது அரசாங்கத்திடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இப்போது அந்தப் பிரச்னை யில்லை. இரும்புக் கனிகளை ஐந்தாண்டுத் திட்டங்களில் இவ்வளவு கொண்டு வரவேண்டுமென்று பணம் ஒதுக்கியிருக்கிறோம். அது materialise ஆகும்போது அதற்குள்ளாக ஸ்டீல் பிளாண்ட் வராவிட்டால், என்ன செய்வது என்பது அப்போதைக்கு உள்ள நிலைமைக்கேற்ப பரிசீலிக்க வேண்டும்.

Export of yarn.

* 194 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :

(a) the quantity of yarn stagnated as on 1—11—1968 in Co-operative Spinning Mills in Tamil Nadu; and

(b) whether there is any proposal to export yarn to foreign countries?

நூல் ஏற்றுமதி

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழக கூட்டுறவு நூற்பு ஆலைகளில் 1—11—1968 அன்றுள்ளவாறு எவ்வளவு நூல் தேங்கியிருந்தது?

(இ) இதை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) 1—11—1968 வரை தமிழ் நாடு கூட்டுறவு நூற்பு ஆலைகளில் தேங்கியிருந்த நூல் 979 பேல்களாகும்.